






# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி

மலர் 2 இதழ் 29 30.07.2026



ஸ்ரீமதே ஸ்ரீ வராஹமஹாதேசிகாய நம:

# முத்துக்கள்

கிருஷ்ண யஜுர் வேத சாகைகள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. அக்னிவேசம்<br>2. ஆத்திரேயம்<br>3. ஆபஸ்தம்பி<br>4. ஆர்ச்சாயினம்<br>5. ஆருணி<br>6. ஆலம்பினம்<br>7. ஆஹவரகம்<br>8. உலபம்<br>9. ஔகேயம்<br>10. ஐகேயம்<br>11. ஔபமன்னியவம்<br>12.கடம்<br>13. கபிஷ்டலகடம்<br>14. காண்டிகீயம் | 15. காமலாயினம்<br>16. காலாபம்<br>17. காலேதை<br>18.சரகம்<br>19. சாகலேயம்<br>20. சாராணீயம்<br>21. தாண்டினம்<br>22. துந்துபம்<br>23. தும்புரு<br>24. தைத்தீரியம்<br>25. பாதண்டநீயம்<br>26. பாரத்வாஜி<br>27. பாலஸ்கினம் | 28. பிராச்யகடம்<br>29. மானவம்<br>30. மைத்திரயணீயம்<br>31. வாதூலம்<br>32. வர்தந்தவீயம்<br>33. வாராயணீயம்<br>34. வாராஹம்<br>35. வைகாநசம்<br>36.சாட்யாய நீ<br>37. சியாமாயனம்<br>38. சுவேதாசுவதாரம்<br>39. ஹாரித்திரவியம்<br>40. ஹாரீரதம்<br>41. இரண்யகேசி |

*********"**********************************************************************

யஜுர்வேதத்திற்குச் சுமார் 49 உபநிஷ தங்கள் உண்டு.

இதில் கிருஷ்ண யஜுர் 'வேத உபநிஷதங்கள் 32. அவை இப்படி.

| | | |
|---|---|---|
| 1. கடம்<br>2. தைத்தீரியம்<br>3. பிரமம்<br>4. கைவல்யம்<br>5. சுவேதசுவதாரம்<br>6. கருப்பம்<br>8. நாராயணம்<br>9. அமிருத நாதம்<br>10. காலாக்னி ருத்திரம்<br>11. க்ஷுரிகம்<br>12.ஸர்வசாரம் | 13. சுக ரகசியம்<br>14. தேஜோபிந்து<br>15. தியானபிந்து<br>16. பிரமவித்தை<br>17. யோகதத்துவம்<br>18. தட்சிணாமூர்த்தி<br>19. ஸ்கந்தம்<br>20. சாரீரிகம்<br>21. யோகசிட்சை<br>22. ஏகாட்சரம்<br>23. அட்சி | 24. அவதூதம்<br>25. கடருத்திரம்<br>26. ருத்திரஇதயம்<br>27.யோக குண்டலினி<br>28. பஞ்சப்பிரமம்<br>29. பிராண அக்னிஹோத்திரம்<br>30. கவிசம் தரணம்<br>31. வராகம்<br>32.ஸரஸ்வதி ரகசியம். |

## சுக்ல யஜுர் வேத உபநிஷதங்கள்

| | | |
|---|---|---|
| 1. ஜாபாலம்<br>2. ஹம்ஸம்<br>3. பரமஹம்சம்<br>4. ஸூபாலம்<br>5. மாந்திரீகம்<br>6. நிராலம்பம் | 7. திரிசிகி பிரமாணம்<br>8. மண்டலப்பிரமாணம்<br>9. அத்வைதய தாரகம்<br>10. பைஸ்கனம்<br>11.பிக்ஷு<br>12. துரியாதீதம் | 13. அத்தியாத்மம்<br>14. தாரஸாரம்<br>15. யாக்ஞவல்கியம்<br>16. சாட்யாயனி<br>17. முக்திகம் |

*******************************************************************************

சுருக்கமான உபநிஷத விளக்கம் இதுதான். "வேதங்களில் சொல்லப்பட்ட உயரிய உண்மைகளை ரிஷிகள் கண்டு எழுதியதே உபநிஷதங்கள்."

யஜுர் வேதம் தொடர்பான மற்ற பிராம்மணம் நூல்கள். தைத்தீரிய என்பது, தைத்தீரிய மந்திரங்களின் யாக விளக்க நூல். இத்துடன் சேர்ந்து பிராம்மணபாகம் என்று ஒன்று உண்டு. அதுவும் மந்திரங்களை விளக்கவும், புலனாக்கவும் உதவும். சதபத பிராமணம் என்பது சுக்லயஜுர் வேத பாஷ்யம் எனக்கூறும் ஆபஸ்தம்பர், போதாயனர், பாரத் வாஜர், சத்தியசாதர், இரண்யகேசினர், வைகாநசர் முதலியவர்கள் எழுதிய சிரௌதக் சூத்திரங்களும் இருக்கின்றன.

வேத தைத்தீரியயாரண்ணியகம் மந்திரங்களிலிருந்து தொகுக்கப்பட்ட ஞான பண்டாரமாகும். பிரஹதாரண் ணியகம் சுக்கில யஜுர்வேதத்திலிருந்து உருவான புனித மொழிகள். இந்த வேத லட்சணங்களை விளக்கும் பிரிதி சாகைகளும் உண்டு.

******************************************************************************

## விருந்தோம்பல்

ஒரு வீட்டிற்கு வரும் விருந்தாளியை (அக்காலத்தில்) வீட்டின் யஜமானன் தன்னைவிடச் சிறந்தவனாக எண்ண வேண்டும். அவனுக்குத்தர வேண்டிய மரியாதைகளைத் தருவது அவனுடைய கடமையாகும். விருந்தாளிகள் வருவது என்பது அவன் செய்த பாக்யம் என்று அவன் எண்ண வேண்டும். அந்த விருந்தாளிகளுக்கு எப்படி எல்லாம் உபசரிப்பது என்பதைக் கீழே வரும் பட்டியல் தருகிறது.

1. ஹே! பிரம்மசாரியே நீங்கள் எங்கே வசிப்பவர்கள்?

2. பிரம்மசாரியே உங்களுக்காக ஜலம் கொண்டு வருகிறேன்.

3. விருந்தாளியே! என் மக்கள் உங்களை திருப்தி செய்யட்டும்.

4. (விராத்ய யதாதே ப்ரியம், ததா அஸ்து) ஹே ஞானஸ்தனே, உங் களுக்கு எது பிரியமோ அது தயாரா கிறது.

5. உங்களின் விருப்பப்படியே இங்கே எல்லாம் நடக்கும்.

6. உங்கள் விருப்பம் எதுவோ அதுவே நடக்கும்.

வரும் விருந்தாளி அக்னி ஹோத்ரம் செய்பவனாக இருந்தால், அந்த வேளை யில் யஜமானன் தவறாமல் அக்னி ஹோத்ரம் செய்ய வேண்டும். வரும் விருந்தாளி "அக்னி ஹோத்ரம் " வழக்கப் படி நிறுத்தப்படவேண்டும். விருந்தாளியிடம் நீங்கள் எத்தனை நாட்கள் தங்கப் போகிறீர்கள் என்பதைக் கேட்கவே கூடாது.

வரும் விருந்தாளி படிக்காதவனாக இருந்தாலும்கூட அவனைத் தான் உபா சிக்கும் தெய்வமாக நினைத்து, அவ னுக்கு எல்லாம் செய்து தரவேண்டும். வந்திருப்பது விருந்தாளியல்ல, "நான் வணங்கும் தெய்வம்" என நினைக்க வேண்டும்.

அதிதி (விருந்தாளியை) எப்படி நினைக்க வேண்டும்?

1. பலமுள்ளவனாக, ஞானபலம் உள்ளவனாக,

2. இந்திரனாக, எதிரிகளை விரட்டு பவனாக,

3. வருணனாக,

4. சோமனாக

5. எங்கும் நல்லெண்ணப் பிரயாணம் செய்பவனாக,

6. எதிரிகளை அழவைப்பவனாக

7. அக்னியைப் போல தேஜஸ்வியாக

8. எல்லோரையும் பிரஜாபதியாக

9. உயர்ந்த பதவியில் இருக்க வேண்டி யவனாக நினைக்க வேண்டும்.

*********************************************************************************

**திருக்குறள்:** திருவள்ளுவர் 'விருந்தோம்பல்' என்று தனி அதிகாரத்தையே (அதிகாரம் 9) அமைத்துள்ளார். விருந்தினரை முகம் மலர்ந்து உபசரிப்பவர் வீட்டில் திருமகள் (செல்வம்) தங்குவாள் என்பது குறளின் கருத்து.

*****************************************************************

**சங்க இலக்கியம்**: வீட்டிற்கு வந்தவருக்குத் தம்மிடம் உள்ள உணவை அளித்துவிட்டு, மீதமுள்ள உணவை உண்பதே தமிழர்களின் மரபு என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

*****************************************************************



